**DEPOSITION OF WITNESS**
**In the Court of the District Munsif Cum Judicial Magistrate No.I, Usilampatti.**
**Deposition of witness plaintiff / defendant**

**O.S No. 79/2014**

Solemnly affirmed to Thiru/Tmt.
of this court in accordance with the provision of Act of 1972 25.02.2025

| | |
|---|---|
| Name :கணேசன் | Caste : |
| Father's Name : லேட். சந்திரன் | Calling: |
| District | Religion : |
| | Age: |

**CHIEF EXAMINATION : PW1**

நான் இந்த வழக்கின் 8ம் வாதி ஆவேன், எனது முதல்விசாரணையை நிரூபணவாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபணவாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்குத் தெரியும். நிரூபணவாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான்.25.03.1960 ம் தேதியிட்ட அய்யாவு என்ற மாயாண்டித்தேவர் என்பவரிடம் 1,2 வாதிகளுடைய தகப்பனாரும் எனது தாத்தாவுமான பெரியமாயத்தேவர் என்பவர் பெற்றுள்ள கிரைய பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ 1** ஆகும், தாவா சொத்து அடங்கிய புல எண் 401/1C1 ல் 1,2 வாதிகள் மற்றும் மேற்படி ராஜம்மாள் ஆகியோர்களது பெயர்களோடு இந்த வழக்கின் 1வது பிரதிவாதியின் தகப்பனாரான தவசித்தேவர் மகன் தீப்பெட்டி குரும்பத்தேவர் என்பவர் பெயரும் சேர்த்து தவறுதலாக ஏற்பட்ட கூட்டுப்பட்டா கணினி நகல் **வா.சா.ஆ. 2** ஆகும், உசிலம்பட்டி வட்டாட்சியர் அவர்கள் 1 வது பிரதிவாதியின் தகப்பனாரான தவசித்தேவர் மகன் தீப்பெட்டி குரும்பத்தேவர் என்பவர் பெயரை கூட்டுப்பட்டாவில் நீக்கி தாவா சொத்தினை பொறுத்து 1,2 வாதிகள் பெயரில்வழங்கிய பட்டாவிற்கான கணினி சிட்டா கணினி நகல் **வா.சா.ஆ.3** ஆகும், மாயாண்டித்தேவர் மகன் பெரியகருப்பத்தேவர் மற்றும் அவரது வாரிசுகளிடம் இந்த வழக்கின் 1வது பிரதிவாதியின் தகப்பனார் தீப்பெட்டி

குரும்பத்தேவர் என்பவர் மோசடியாக பெற்றுள்ள கிரையப்பத்திரம் **வா.சா.ஆ.4** ஆகும், 06.09.2013 ம் தேதியிட்ட நன்கொடை ஆவணம் **வா.சா.ஆ. 5** ஆகும், 13.03.2014 ம் தேதியிட்ட வழக்கின் 1,2 வாதிகள் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.6** ஆகும், வழக்கறிஞர் அறிவிப்பினை பிரதிவாதிகள் பெற்றுக் கொண்டதற்கான தபால் அலுவலக ஒப்புதல் அட்டைகள் ( 1 முதல் 3 வரிசைகள் ) அசல் **வா.சா.ஆ.7** ஆகும், 19.03.2014ம் தேதியிட்ட 1,2 பிரதிவாதிகள் அனுப்பிய பதில் வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.8** ஆகும், 07.06.1978 ம் தேதியிட்ட தாவா சொத்திற்கு கீழ்புறத்தில் தென்புறம் சர்வே எண் 401/1 ல் ஏக்கர் 2 செண்டு 3ல் செண்டு 10 னை பொறுத்து தவசித்தேவர் மகன் குரும்பத்தேவர் என்பவர் வீரணத்தேவர் மகன் கருப்பையா என்பவருக்கு எழுதிக்கொடுத்த கிரையப் பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ. 9** ஆகும், 15.07.1983 ம் தேதியிட்ட தாவா சொத்திற்கு தென்புறம் செண்டு 3னை பொறுத்து பெரியகருப்பத்தேவர் மகன் சக்கரைத்தேவர் என்பவர் வீரணத்தேவர் மகன் கருப்பையா என்பவருக்கு சர்வே எண் 401/1ல் ஏக்கர் 2 செண்டு 3ல் தென்புறம் செண்டு 3னை பொறுத்து எழுதிக்கொடுத்த கிரையப் பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.10** ஆகும், 21.02.1990ம் தேதியிட்ட தாவா சொத்திற்கு கீழ்புறத்தில் தென்புறம் சர்வே எண் 401/1ல் ஏக்கர் 2 செண்டு 3ல் தென்புறம் செண்டு 13 னை பொறுத்து வீரணத்தேவர் மகன் கருப்பையா என்பவர் மொக்கைமாயன் மனைவி ராஜம்மாள் என்பவருக்கு எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.11** ஆகும், தாவா சொத்திற்குரிய புலவரைபடம் கணினி நகல் **வா.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**(வழக்கு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது )**

S.d./Ganesan
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.